தற்போது இயலாத காரியம். அந்த யோசனையை அரசாங்கம் மனத்தில் கொண்டு என்ன செய்யவேண்டுமென்று யோசிக்கும் தற்போது இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the Madras Places of Public Resort (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 12 of 1964) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2 was put and carried.

Clause 1.

MR. SPEAKER : The question is—

'That clause I do stand part of the Bill.'

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Mr. Speaker, Sir, I move—

'That in sub-clause (1) of clause 1, for the figures "1964", substitute the figures "1965".'

The amendment was put and carried.

Clause 1 as amended was put and carried.

The Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I move—

'That the Madras Places of Public Resort (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 12 of 1964) as amended be passed.'

The motion was put and carried and the Bill as amended was passed.

VIII.—GOVERNMNT MOTIONS.

(1) CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, under Rule 21 (3) of the Assembly Rules I move—

'That item (4) in the main item III in the agenda, viz., 'The Madras Tenancy (Amendment) Bill, 1965' be taken up before item (3), viz., 'The Madras Land Improvement Schemes (Amendment) Bill, 1964'.'

The motion was put and carried.

VII. GOVERNMENT BILLS—*cont.*

(3) THE MADRAS TENANCY (AMENDMENT) BILL, 1965.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Tenancy (Amendment) Bill, 1965[a] and move—

'That the Bill be taken into consideration.'

---

a Published in the *Fort St. George Gazette*, dated 6th January 1965.

22nd January 1965] [Sri V. Ramaiah]

Sir, in moving the motion, I wish to explain briefly the object and the main provisions of the Bill.

In the Second Five-Year Plan, the Planning Commission has observed that in the case of Defence Services personnel, it is of the highest importance that tenancy legislation should not place them under any handicap as compared to those who are able to reside in the village and cultivate their lands and that persons serving in the Armed Forces should have a feeling of security and full assurance that their interests would not be adversely affected. It has also observed that if persons serving in the Armed Forces are owners of land, they should have the right to lease it and, if they are tenants, they should have a right to sub-let the land and that, on retirement or discharge, Defence Services personnel should have unrestricted rights to resume land for personal cultivation from the tenant or the sub-tenant as the case may be.

The question as to what provisions should be made to safeguard the interests of persons serving in the Armed Forces has been engaging the attention of the Government for some time. In the context of the present National Emergency, the matter has assumed urgent importance. The Government have decided to amend the Tenancy and Land Ceiling Acts so as to confer certain special privileges on members of the Armed Forces including the Merchant Navy Personnel and to the widows and other dependants of such members who sacrifice their lives in the defence of the country. This Bill seeks to give effect to this decision.

I shall now briefly explain the main provisions of the Bill.

The Tanjore Pannaiyal Protection Act, 1952, is to be amended to enable a pannaiyal, who is enrolled as a member of the Armed Forces, to be reinstated as a pannaiyal on his return from service, unless the Conciliation Officer decides not to order such reinstatement, having regard to the subsequent reduction in the extent of the farm and other such relevant matters.

The Madras Cultivating Tenants Protection Act, 1955 is to be amended—

(i) to enable a cultivating tenant, who is enrolled as a member of the Armed Forces to sub-let the land held by him and on his return from service, to resume the land from the sub-tenant;

(ii) to provide that a member of the Armed Forces in service will be deemed to carry on personal cultivation on a land if such land is cultivated by the members of his family or by his own servants or by hired labour with his own or hired stock; and

(iii) to enable a landlord who is enrolled as a member of the Armed Forces, on his return from service, to resume, up to the ceiling limit, for personal cultivation, the land which he had leased to a cultivating tenant.

[Sri V. Ramaiah] [22nd January 1965

The Tiruchirappalli Kaiaeruvaram and Mattuvaram Act 1958 is to be amended—

(i) to enable a Kaiaeruvaramdar who is enrolled as a member of the Armed Forces, on his return from service, to be re-engaged as a Kaiaeruvaramdar by the land-owner concerned, unless the Tahsildar decides not to order such re-engagement having regard to the subsequent reduction in the extent of the land concerned and other such relevant matters, and

(ii) to enable a member of the Armed Forces, who was a mattuvaramdar under a land-owner owning more than three acres of wet land or its equivalent on return from service to be re-engaged as a mattuvaramdar in respect of that land with all the rights enjoyed by him before his enrolment as a member of the Armed Forces.

The Madras Public Trusts (Regulation of Administration if Agricultural Lands) Act, 1961 is to be amended—

(i) to provide that a member of the Armed Forces in service will be deemed to be a cultivating tenant in respect of a land if such land is cultivated by the members of his family or by his own servants or by hired labour, with his own or hired stock,

(ii) to provide that in the case of a member of the Armed Forces, the return under section 10(1) shall be submitted within six months after the Emergency is over, and the return under section 10(2) shall be submitted within six months after the Ewerbency is ober or within ninety days from the date of acquisitions of the land, whichever is later,

(iii) to enable a cultivating tenant who is enrolled as a member of the Armed Forces, on his return from service, to resume possession from his sub-tenant of the land sub-let by him.

The Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961 is to be amended—

(i) to provide that in the case of a member of the Armed Forces, the returns under sections 8(1) and 61(1) shall be furnished within six months after the Emergency is over,

(ii) to provide, that in the case of a member of the Armed Forces, the return under section 21(1) shall be furnished within six months after the Emergency is over or within ninety days from the date of acquisition of the land, whichever is later,

(iii) to provide that in the case of a member of the Armed Forces, the return under section 21(2) shall be furnished within six months after the Emergency is over or within ninety days from the date of marriage or adoption, whichever is later.

A provision is also to be made in each of the first four Acts referred to, to the effect that the term 'member of the Armed Forces' shall have the same meaning as in section 3(29) of the Madras Land Reforms (Fixation of Ceiling on Land) Act, 1961. Under this section a 'member of the Armed Forces' is a person in the service of Air Force, Army or Navy of the Union of India

22nd January 1965] [Sri V. Ramaiah]

and includes a seaman. A 'seaman' has been defined in that Act as a person including a master, pilot or apprentice employed or engaged as a member of the crew of a ship or a sailing vessel to which the Merchant Shipping Act, 1958 applies. Thus the Merchant Navy personnel are covered by the concessions proposed.

Another provision is also to be made in each of the first four Acts referred to that the special privileges conferred on a member of the Armed Forces by the proposed Act will, after his death while in service, be available to his widow or any person dependent on his immediately before his death.

Incidentally section 13 (2) of the Tanjore Pannaiyai Protection Act, 1952 is to be amended so as to provide for an appeal to the Revenue Court against the award of the Conciliation Officer.

With these words, I request the House to accept the motion.

Mr. SPEAKER: Motion moved—

"That the Madras Tenancy (Amendment) Bill, 1965, be taken into consideration."

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு ராணுவ சேவைக்காகச் செல்கிறவர்களுக்கு கௌரவம் அளிக்கும் முறையில் வேண்டுமானால் இதை இயற்றலாமே தவிர நடைமுறையில் இதில் பல கஷ்டங்கள் இருக்கப் போகின்றன. ராணுவத்தில் சேர்ந்து ஐந்து வருடம், பத்து வருடம் அங்கு பழகிவிட்டு, அங்கு ராணுவ வேலைகளில் ஈடுபட்டு திரும்புகிற நேரத்தில் திரும்ப நிலச்சுவான்தாரிடம் போய் பண்ணையாளாக வேலைக்குப் போவார்கள் என்றால் அது கஷ்டம்தான். ராணுவத்தில் சேவை செய்து விட்டு திரும்புகிறவர்களைப் பார்க்கிறோம். திரும்ப வந்து வயலில் இறங்கி சேற்றில் இறங்கி குப்பை அள்ளிக் கொட்டி வேலை செய்யும் மனப்பான்மையுடன் வருவார்கள் என்பது துர்பலம். மரியாதையாக, அவர்களுக்கு கோர உரிமையிருக்கும் என்று சொல்வதில் ஆட்சேபணையில்லை. இதை நான் எதிர்ப்பதாகக் நினைக்க வேண்டாம். மத்திய சர்க்காருக்கு நம் ராஜ்ய சர்க்கார் எடுத்துச் சொல்லவேண்டியது ராணுவத்திலிருந்து திரும்புகிறவர்களுக்கு என்னென்ன ஸ்தானங்கள் ஒதுக்கவேண்டுமோ அப்படி ஒதுக்கி மாற்று வேலைகள் அவர்களுக்கு கொடுக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமே தவிர வேறு ஆள்களை வைத்து வேலை வாங்கிய பிறகு அவர்களுக்கு குந்தகமான முறையில் திரும்ப அவர்கள் வருவார்கள் என்று எதிர்பார்ப்பது கஷ்டம். பண்ணையாள் சட்டம், கையேறு வாரம், மாட்டு வாரம் இவற்றில் மாட்டு வாரம், கையேறு வாரம் இவற்றில் சொந்த உழைப்பு. குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் உழைக்கும் உழைப்பு இந்த வேலைகளை ராணுவத்திலிருந்து திரும்புகிறவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? இதில் ஒரு அபாயகரமான ப்ரொவிஷன் இருக்கிறது. நிலச்சுவான்தாரர்கள், ராணுவத்திற்குப் போய்விட்டு வந்தவர்கள் நிலத்தை தாங்கள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று விரும்பினால் அவர்களுக்கு அந்த உரிமை கொடுப்பதற்காகத்தான் கையேர்வாரந்தார், மாட்டு வாரந்தார் இவர்களோடு சேர்ந்து இப்படி வைத்தார்களோ என்று

நினைக்க வேண்டியிருக்கிறது. நிலச்சுவான்தாரர்களுக்கு சலுகை கொடுக்க வேண்டுமென்றால் அவர்களைக் காட்டிச் சொல்வது இல்லை. அனாதைகள், விதவைகள் இவர்களைக் காட்டித்தான் பேசுவார்கள், அப்படித்தான் இங்கு பேசப்பட்டது. ராணுவத்தில் சேர்ந்துள்ள பண்ணையாட்களைக் காட்டி நிலச்சுவான்தார்களுக்கு உரிமை கொடுக்க முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு நிலச்சுவான் தாரர்கள் ராணுவத்திற்குப் போயிருக்கப் போகிறார்கள். அவர்களுக்கு துப்பாக்கி பிடித்து சண்டை போட தைரியம் இருக்காது. நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள் ராணுவத்தில் மற்ற வேலைகளுக்காக போயிருக்கலாம். அப்போர்ப்பட்டவர்களுக்குக்கூட சலுகை கொடுப்பதாக இருந்தால் அதற்குக்கூட ஆட்சேபனை யில்லை. சிறிய நிலச்சுவான்தாரர்களுக்கு நாங்கள் விரோதிகள் என்று நினைத்து சிலர் பேசினார்கள். சிறிய நிலச் சொந்தக்காரர்களுக்கு எல்லாச் சலுகையும் கொடுக்க, மீட்சி உரிமை கூட கொடுக்க நாங்கள் தயார். ஆனால் விரிவான சட்டம் இயற்றினால்தான் அது சாத்தியமாகும். ஆனால் மற்றவர்கள் நிலம் இழக்கக்கூடாது. சிறிய நிலச்சொந்தக்காரர்களை காண்பித்து பெரிய நிலச்சுவான்தாரர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும் முறையில் போகக்கூடாது. இதைப் பார்த்தால் அப்படியிருக்கிறது. என் ஒரு திருத்தத்தையாவது ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும். ராணுவத்தில் சேரும்போது சொந்த சாகுபடி செய்திருந்தால்தான் மீட்சி உரிமை கொடுக்க வேண்டும். ராணுவத்திற்கு போவதற்கு குத்தகைக்கு விட்டு விட்டு போகும் நிர்பந்தம் இருந்தால் பூராவையும் எடுத்துக்கொள்ள சலுகை கொடுப்பதாகயிருந்தாலும் எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் இதில் இருக்கக்கூடிய வாசகத்தைப் பார்க்கிறபொழுது ராணுவத்திலிருந்து சேவை செய்துவிட்டு திரும்பி வருகின்றவர்களுக்கு ஒரு சலுகை கொடுப்பது போல்தான் இருக்கிறது. இந்த மசோதாவை நிறைவேற்றி இதை அமலுக்குக் கொண்டுவரும்போது பல கஷ்டங்கள் ஏற்படும் என்பதை இப்போதே என்னால் உணர முடிகிறது. அதே நேரத்தில் அரசாங்கம் இப்போது எண்ணுவது போல் ராணுவத்திற்குச் சென்று திரும்புகிறவர்களுக்கு போதிய அளவு பலன் கிடைப்பதிலும் பல கஷ்டங்கள் ஏற்படும் என்று நினைக்கிறேன். உண்மையிலேயே ராணுவத்திற்குச் சென்று திரும்புகின்றவர்களுக்கு நாம் நன்றி செலுத்த கடமைப் பட்டவர்கள் என்ற நோக்கம் அரசாங்கத்திற்கு உண்மையாகவே இருக்குமானால் புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலைகளில் இத்தனை சதமானம் ஸ்தானங்கள் அவர்களுக்கென்று தனியாக ஒதுக்கலாம். ரயில்வே, அது போன்றிருக்கின்ற பிற ஸ்தாபனங்கள், இன்னும் மத்திய அரசாங்கத்தின் கீழ் நடைபெறக் கூடிய திட்டங்கள் இவைகளில் எல்லாம் இத்தனை சதமானம் ஸ்தானங்கள் ராணுவத்திற்குச் சென்று திரும்பி வருகின்றவர்களுக்கு என்று ஒதுக்கி வைத்துவிட்டால் நல்லது. அதுதான் அரசாங்கம் செய்யக் கூடிய பெரிய நன்மையாக இருக்கும். அதுவல்லாமல் கிராமத்தில் இருக்கின்ற குடியானவர்களையும் எக்ஸ்-சர்வீஸ் மென்களையும் விவசாயத்தில் கொண்டு போய் மோத விடுவது அவ்வளவு நல்லதல்ல என்று நான் கருதுகிறேன். இருப்பினும், ராணுவத்திற்குச்

22nd January 1965] *[திரு. மீ. கலியாணசுந்தரம்]*

சென்று திரும்பி வருகின்றவர்களுக்கு கொடுக்கின்ற கௌரவம் என்ற முறையில் இந்த மசோதா வந்திருக்கின்ற காரணத்தால், நான் கூறிய ஆலோசனைகளை எல்லாம் அங்கீகரித்து இந்த மசோதாவை ஆதரிப்பதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : கனம் சபாநாயகர் அவர்களே, கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் இந்த மசோதாவை பொதுவாக வரவேற்றுப் பேசியபோதிலும், அவர்களுக்கு தோன்றக்கூடிய சில சந்தேகங்களையும் தெரிவித்தார்கள். ராணுவத்திற்குச் சென்று நாலைந்து வருடங்கள் சேவை செய்துவிட்டு விவசாயம் செய்வதற்கென்றே திரும்பி வந்துவிடுவார்களோ என்பதும் மேலும் ராணுவத்தில் வேலை செய்தவர்கள் விவசாயம் செய்ய முன்வரமாட்டார்கள் என்பது அவர்களுடைய சந்தேகத்தில் ஒன்று. ராணுவத்திற்கு சென்று சேவை செய்யக்கூடியவர்கள், திரும்பி வரும்போது மீண்டும் அவர்கள் விவசாயம் செய்வதற்கு பாதுகாப்பு இருக்கவேண்டும், அதற்காக சட்டத்தில் இடம் இருக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அந்த நோக்கத்தை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். ஆனல் அவர்கள் கொண்டிருக்கிற கொள்கையின் அடிப்படையில், அவர்களுடைய நினைப்பின் அடிப்படையில் இன்னொரு சந்தேகத்தையும் தெரிவித்தார்கள். ஏதோ நிலம் வைத்திருக்கக் கூடியவர்களிடமிருந்து நிலத்தை எடுத்து ராணுவத்திலிருந்து திரும்பி வந்தவர்களுக்கு அரசாங்கம் எடுத்துக்கொடுத்துவிடுமோ என்ற சந்தேகம் அவர்களுக்குத் தோன்றியது. அவ்விதமான துன்பம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதுதான் அவர்கள் கருத்து என்று நினைக்கிறேன். இதற்காகவே ராணுவத்திற்கு பலர் போய்விடுவார்களோ என்ற சந்தேகமும் வந்தது. அவ்வளவு எளிதாக ராணுவத்திலிருந்து திரும்பி வந்துவிட முடியாது. ஒருவர் ராணுவத்தில் சேர்ந்து விட்டால், அவருடைய சேவை எல்லாம் முடிந்து வீட்டுக்குப்போகலாம் என்று டிஸ்சார்ஜ் செய்த பின்னுல்தான் திரும்பி வர முடியும், அப்போதுதான் இந்த சலுகைகளை எல்லாம் பெற முடியும். அப்படி வருகின்றவர்கள், தாங்கள் ராணுவத்திற்கு போகும்போது தாங்களாக விவசாயம் செய்து கொண்டிருந்தவர்களாக இருந்திருந்தால்தான் இந்த பாதுகாப்பு கிடைக்கும். அதல்லாமல் வேறு விதத்தில் மாஜி ராணுவத்தினர்களுக்கு வேறு வேலை தேடிக் கொடுக்கவேண்டாம் என்ற எந்தவிதமான கருத்தும் அரசாங்கத்திற்கு கிடையாது. எல்லா இடங்களிலும், வேலை வாய்ப்பை அவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Tenancy (Amendment) Bill 1965 be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 6 were put and carried.

Clause 1, the Enacting Formula and Long Title were put and carried.

[22nd January 1965

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

"That the Madras Tenancy (Amendment) Bill, 1965 be passed."

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைப்பற்றி ஆரம்பத்தில் நான் பேசியதற்கு பதில் சொல்லக்கூடிய வகையில் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ராணுவத்திலுள்ளவர்கள் விவசாயம் செய்ய முன்வரமாட்டார்கள் என்று நான் கூறியதாக சொன்னார்கள். நான் சொன்னது விவசாயத்தில் பண்ணையாட்களைப் போன்று வேலை செய்வதற்கு அவர்கள் முன் வர மாட்டார்கள் என்றுதான் சொன்னேன். குத்தகைக்கு நிலத்தை எடுத்து விவசாயம் செய்யவேண்டும் என்றால் அதற்கு யாருக்கு மறுப்பு சொல்ல மாட்டார்கள். அரசாங்கத்தினிடத்தில் ஏற்கெனவே ஒரு கொள்கை இருந்து வருகிறது, அதாவது ராணுவத்திலிருந்து திரும்பி வருகின்றவர்களுக்கு கூட்டுறவு பண்ணைகள் மூலம் நிலங்களை ஒதுக்குவது, அரசாங்கத்திற்கு சொந்தமான நிலங்களாக இருந்தாலும் சரி, தனிப்பட்டவர்களுடைய நிலங்களாக இருந்தாலும் சரி, இவ்விதம் ராணுவத்திலிருந்து திரும்பி வருகிறவர்களுக்கு நிலங்களை சாகுபடிக்கு ஒதுக்கி கொடுப்பது சர்க்காரின் கொள்கையாக இருந்து வருகிறது. சர்க்கார் நிறுவனங்களுக்கும் அதிக சிரமமில்லாமல் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் எனது யோசனைகள் பயன் அளிக்கும் என்று நம்புகிறேன். ராணுவத்திற்குச் சென்று திரும்பி வருகிறவர்களுக்கு கௌரவம் கொடுக்க வேண்டும் என்ற முறையில் இந்த மசோதாவை கொண்டு வந்திருப்பதால் அதில் எனக்கு எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் திரு வெ. ராமைய்யா: கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும் போது ஏதோ ராணுவத்தினருக்கு கௌவரம் கொடுக்கவேண்டும் என்ற அடிப்படையில் தான் மசோதா கொண்டு வருவதாக மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறார்கள். எப்படியிருந்தாலும் அவர்களுக்கு இந்த மசோதா நல்ல பாதுகாப்பும் பயனும் அளிக்கவேண்டும் என்ற முறையில்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Tenaucy (Amendment) Bill, 1965 be passed."

The motion was put and carried and the Bill was passed.

(4) THE MADRAS LAND IMPROVEMENT SCHEMES (AMENDMENT) BILL, 1964,

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg leave to introduce the Madras Land Improvement Schemes (Amendment) Bill, 1964[b] and move—

"That the Bill be taken into consideration."

---

* Published in the *Fort St. George Gazette*, dated 25th November 1964.